## லாகுகல பிரதேச சபை
## அம்பாறை மாவட்டம்

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2018 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2019 யூன் 21 ஆந் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் சுருக்கமான அறிக்கையும் விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையும் 2019 ஆகஸ்ட் 15 ஆந் திகதி தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

எனது அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து லாகுகல பிரதேச சபையின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

**(அ) கணக்கீட்டுக் குறைபாடுகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | மீளாய்வாண்டின் இறுதியில் மிகுதியாக இருந்த வீதி விளக்குகள் இருப்பின் பெறுமதியான ரூபா 79,259 தொகை கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | சரியாக கணக்குகள் தயாரிக்கப்பட வேண்டும். | இந்த இருப்பை எதிர்வரும் ஆண்டின் கணக்கில் சீராக்கி சரிசெய்யப்படும். |
| (ii) | மீளாய்வாண்டின் போது மாகாணசபை மற்றும் உள்ளூராட்சி அமைச்சில் இருந்து கிடைத்த ரூபா 517,776 பெறுமதியான கனணி மற்றும் உபகரணங்கள் மூலதனமாக்கப்படவில்லை. | சரியாக கணக்குகள் தயாரிக்கப்பட வேண்டும். | இந்த பெறுமதி சரியாக எதிர்காலத்தில் கணக்கீடு செய்யப்படும். |
| (iii) | 2013 ஆம் ஆண்டு முதல் 2017 ஆம் ஆண்டு வரை கிடைக்க வேண்டிய முத்திரைக் கட்டணம் ரூபா 653,500 தொகை மற்றும் 2018 ஆம் ஆண்டிற்காக | சரியாக கணக்குகள் தயாரிக்கப்பட வேண்டும். | பல வருட காலமாக இந்தப் பிரச்சினை காணப்படுவதுடன் எதிர்காலத்தில் அது சரி செய்யப்படும். |

| | | | |
|---|---|---|---|
| | கிடைக்கவேண்டிய தொகை என்பன இனங்கானப்பட்டு கணக்கீடு செய்யப்படவில்லை. | | |
| (iv) | மீளாய்வாண்டின் யூன் முதல் திசெம்பர் வரையான காலப்பகுதிக்குரியதாக கிடைக்கவேண்டிய நீதிமன்ற தண்டப்பணம் ரூபா 1,542,022 தொகை கணக்கீடு செய்யப்படவில்லை. | சரியாக கணக்குகள் தயாரிக்கப்பட வேண்டும். | கணக்கீடு செய்தல் தொடர்பாக அனுபவமுள்ள உத்தியோகத்தர்கள் இல்லாமையினால் இந்த பிழைகள் ஏற்பட்டிருந்ததுடன் எதிர்வரும் ஆண்டில் அது சரி செய்யப்படும். |
| (v) | 2017 ஆம் ஆண்டில் நிறைவேற்றப்பட்ட 02 நிர்மாண வேலைகளுக்கு உரியதாக செலுத்த வேண்டிய ரூபா 1,583,550 தொகை ரூபா 1,465,195 ஆக மீளாய்வாண்டின் போது திரண்ட நிதியத்தில் சீராக்கப்பட்டிருந்தது. | சரியாக கணக்குகள் தயாரிக்கப்பட வேண்டும். | இந்த பெறுமதி சரியானதாக எதிர்காலத்தில் கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| (vi) | 2018 ஆம் ஆண்டில் நிறைவேற்றப்பட்ட 02 நிர்மாணங்களுக்கு உரியதாக செலுத்தவேண்டிய ரூபா 2,919,244 தொகைக்காக நிதி ஏற்பாடு ஒதுக்கப்பட்டிருக்கவில்லை. | சரியாக கணக்குகள் தயாரிக்கப்பட வேண்டும். | இந்த பெறுமதி சரியானதாக எதிர்காலத்தில் கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

**(ஆ) பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்**

**பெறவேண்டிய கணக்குகள்**

| **கணக்காய்வு அவதானிப்பு** | **பரிந்துரை** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
|---|---|---|
| 1998 ஆம் ஆண்டு முதல் 2012 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதிக்கு உரிய ரூபா 86,066 தொகையான முற்பணம் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை | அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | இதனை கணக்கீடு செய்தல் தொடர்பாக உத்தியோகத்தர்களில் காணப்பட்ட அறிவு அனுபவம் குறைந்ததன் அடிப்படையில் ஏற்பட்டிருந்ததது. தற்போது இது தொடர்பான தகவல்கள் கண்டறியப்பட்டுள்ளதுடன் |

| | | |
|---|---|---|
| | | எதிர்காலத்தில் அவற்றை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

**(இ) கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இன்மை**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| ரூபா 193,811,285 தொகையான 06 சொத்து விடயங்கள் மற்றும் ரூபா 1,512,910 தொகையான ஒரு பொறுப்பு விடயம் என்பவற்றின் ஏடுகள், பட்டோலைகள், காலப்பகுப்பாய்வு மற்றும் மீதி உறுதிப்படுத்தல்கள் சமர்ப்பிக்கப்படாமையினால் கணக்காய்வின் போது திருப்திரமாக சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது. | நிதி கூற்றுக்களில் காணப்படுகின்ற கணக்கு மீதிகளை உறுதிப்படுத்துகின்ற சான்றுகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். | எதிர்காலத்தில் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

## 1.4 இணங்காமைகள்

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்து.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 1988 இன் பிரதேச சபைகள் (நிதி மற்றும் நிர்வாகம்) விதி 207 | சபைக்கு சொந்தமான மற்றும் சபையினால் பயன்படுத்தப்படுகின்ற காணிகளை கையேற்று மதிப்பீடு செய்து நிலையான சொத்துப்பதிவேட்டில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | பிரதேச சபை விதிக் கோவையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | எதிர்காலத்தில் அந்தக் காணிகள் சபைக்கு கையேற்கப்படும். |

(ஆ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணம்

| | | | |
|---|---|---|---|
| நிதிப்பிரமாணம் 571 | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு 02 வருடங்களை விஞ்சிய ரூபா 810,324 தொகையான வைப்பு தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும் | இந்த பிரச்சினையை சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

(இ) திறைசேரிச் சுற்றறிக்கை

| | | | |
|---|---|---|---|
| 2002 நவம்பர் 28 ஆம் திகதிய IAI/2002/02 ஆம் இலக்க சுற்றறிக்கை | கணனி மற்றும் கணனி துணைப்பாகங்கள் தொடர்பான தகவல்களை உள்ளடக்கிய பதிவேடொன்று பேணிச்செல்லப்படவில்லை. | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும் | கணனி மற்றும் உப பாகங்கள் பதிவேடொன்று எதிர்காலத்தில் பேணிச் செல்லப்படும். |

(ஈ) அரச நிர்வாக சுற்றறிக்கை

| | | | |
|---|---|---|---|
| 2016 திசெம்பர் 21 ஆம் திகதிய 30/2016 ஆம் இலக்க சுற்றறிக்கை | சபைக்கு சொந்தமான எரிபொருள் பரிசோதனை மேற்கொள்ளப்பட வேண்டிய 11 வாகனங்கள் தொடர்பாக எரிபொருள் பரிசோதனை மேற்கொள்ளப்படவில்லை. | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும் | எதிர்காலத்தில் எரிபொருள் பரிசோதனை மேற்கொள்ளப்படும். |
| 2009 ஏப்ரல் 16 ஆம் திகதிய 09/2009 ஆம் இலக்க சுற்றறிக்கை | உத்தியோகத்தர்களின் வருகை மற்றும் வெளிச்செல்கை என்பவற்றை பதிவதற்கு கைவிரல் அடையாள இயந்திரம் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும் | எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2018 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் வருமானத்தை விஞ்சிய மீண்டுவரும் செலவினம் ரூபா 212,437 ஆக இருந்ததுடன் அதற்கு எதிராக முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 346,946 ஆக இருந்தது.

## 2.2 வருமான நிர்வாகம்

### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரியதாகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | | 2018 | | | | 2017 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வருமானம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | வாடகை | 1,602,000 | 1,297,112 | 1,297,112 | 200 | 1,100,000 | 946,558 | 946,558 | 200 |
| (ii) | அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 230,000 | 235,790 | 235,790 | 26,563 | 205,000 | 219,960 | 219,960 | 26,783 |
| (iii) | ஏனைய வருமானம் | 2,000,000 | 1,169,200 | 1,169,200 | - | 2,535,000 | 1,802,166 | 1,802,166 | - |

### 2.2.2 ஏனைய வருமானம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2009 ஏப்ரல் 17 ஆம் திகதிய 1597/8 ஆம் இலக்க வர்த்தமானி இன் பிரகாரம் ஒரு தொலைபேசி கோபுரத்திற்காக அங்கீகாரத்தை வழங்குவதற்கு ஆகக் குறைந்தது ரூபா 20,000 வீதம் அறவிட வேண்டிய போதிலும் சபை அதிகாரப் பிரதேசத்தில் காணப்படுகின்ற 08 தொலைபேசி கோபுரங்களில் இருந்து ரூபா 160,000 தொகை அறவிடப்பட்டிருக்கவில்லை. | நிலுவைக் கட்டணம் அறவிடப்பட வேண்டும். | இந்த ஆண்டில் அதனை சரிசெய்து சரியாக அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

### 2.2.3 நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

(அ) நீதிமன்றத் தண்டப்பணம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2018 திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறு கிடைக்க வேண்டிய நீதிமன்ற தண்டப்பணம் ரூபா 1,542,022 தொகை அறவிடப்பட்டிருக்கவில்லை | நிலுவை நீதிமன்ற தண்டப்பணம் அறவிடப்பட வேண்டும். | கருத்து தெரிவிக்கப்படவில்லை. |

(ஆ) **முத்திரைக் கட்டணம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கிடைக்க வேண்டிய முத்திரைக் கட்டணம் ரூபா 653,500 தொகை அறவிடப்பட்டிருக்கவில்லை. | நிலுவை முத்திரைக் கட்டணம் அறவிடப்பட வேண்டும். | கருத்து தெரிவிக்கப்படவில்லை. |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

(அ) உப விதிகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 126 ஆம் பிரிவின் கீழ் 30 பிரதான பணிகளை | உபவிதி விதிக்கப்படாதிருந்த விடயங்களுக்காக | உப விதிகளை தயாரித்து மாகாண சபைக்கு அனுப்பப்பட்டிருந்த போதிலும் |

| | | |
|---|---|---|
| நிறைவேற்றுவதற்காக உப விதிகள் விதிக்கப்பட வேண்டிய போதிலும், 2018 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் உபவிதிகள் விதிக்கப்பட்டிருந்தது. | உபவிதிக்கப்பட வேண்டும். | அது அங்கீகரிக்கப்பட்டிருக்கவில்லை. அது கிழக்கு மாகாணத்திலும் காணப்படுகின்ற பிரச்சினையொன்றாக உள்ளது. |

(ஆ) செயல்நடவடிக்கைத் திட்டம்

| **கணக்காய்வு அவதானிப்பு** | **பரிந்துரை** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
|---|---|---|
| பிரதேச சபையினால் மீளாய்வாண்டிற்காக செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்படாதிருந்தமையால் ஆண்டில் அடைவதற்கு தேவையான நோக்கங்கள் மற்றும் எதிர்பார்ப்பு செயற்பாடுகள் இனங்காணப்பட்டிருக்கவில்லை. | ஒவ்வொரு வருடங்களுக்காவும் செயல் நடவடிக்கை திட்டம் தயாரிக்கப்பட வேண்டும். | செயல் நடவடிக்கைத்திட்டம் தயாரிக்கப்படும். |

(இ) கழிவுப் பொருள் முகாமைத்துவம்

| **கணக்காய்வு அவதானிப்பு** | **பரிந்துரை** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
|---|---|---|
| பிரதேச சபையினால் கழிவுப் பொருள் அகற்றப்படுகின்ற காணிக்காக சுற்றாடல் அனுமதிப்பத்திரம் பெறப்பட்டிருக்கவில்லை. | நிலுவைக் கழிவுப் பொருள் வரியை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | பிரதேச சபைக்கு கழிவுப் பொருட்களை கொண்டு போடுவதற்காக குறித்த காணியொன்றைப் பெற்றுக் கொள்வதற்கு உரிய நிறுவனம் நடவடிக்கை எடுக்காதிருந்ததுடன் அது தொடர்பாக பிரச்சினை ஏற்பட்டிருந்தது. |

**(ஈ) நிலைபேறான அபிவிருத்தி இலக்கு**

| **கணக்காய்வு அவதானிப்பு** | **பரிந்துரை** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
|---|---|---|
| பிரதேச சபையினால் ஐக்கிய நாடுகளின் “நிலைபேறான அபிவிருத்தி நிகழ்ச்சி | நிலைபேறான அபிவிருத்தி நோக்கம் மற்றும் இலக்குகள் | எதிர்காலத்தில் தெளிவுபடுத்துவதற்கு நடவடிக்கை |

| | | |
|---|---|---|
| நிரல் - 2030'' தொடர்பாக அறிந்திருக்கவில்லை. | இனங்காணப்பட்டு ஸ்தாபிக்கப்பட வேண்டும். | எடுக்கப்படும். |

### 3.2 மனிதவள முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பதவி அணியினரில் 06 பதவிகளுக்காக 12 வெற்றிடங்கள் காணப்பட்டன. | வெற்றிடங்கள் நிரப்பபட வேண்டும். | இந்தப் பதவிகளை நிரப்புவதற்காக எங்களால் பல சந்தர்ப்பங்களில் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. |
| (ஆ) | சபையில் சேவையாற்றி வேலை நீக்கம் செய்யப்பட்ட மற்றும் இடம்மாற்றலாகிச் சென்ற இரண்டு ஊழியர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 8,000 தொகையான ஊழியர் கடன் மீதி 2018 திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் அறவிடப்பட்டிருக்கவில்லை. | ஊழியர் கடனை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | இந்த நிலுவை கடன் மிக விரைவில் அறவிடப்படும். |

### 3.3 சொத்துக்கள் முகாமைத்துவம்

#### 3.3.1 பராமரித்தல் மற்றும் பழுதுபார்த்தல் மேற்கொள்ளப்படாமை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| பிரதேச சபைக்கு சொந்தமான 21 வாகனங்கள் மற்றும் இயந்திர உபகரணங்கள் பழுதுபார்க்க வேண்டிய நிலையில் காணப்பட்டதுடன் 09 வாகனங்களை பழுதுபார்த்து பயன்படுத்தாமல் சபை வளவில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. | வாகனங்களை பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | சபையில் குறைந்த வருமான நிலை காணப்படுகின்றமை இதற்கு காரணமாகும் |

### 3.3.2 கையேற்கப்படாத சொத்துக்கள்

பின்வரும் விடங்கள் அவதானிக்கப்பட்டன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபைக்குச் சொந்தமாக காணப்படுகின்ற 18 வாகனங்கள் மற்றும் இயந்திர உபகரணங்களில் 11 இன் உரித்து மற்றும் 54.75 ஏக்கரை உடைய 16 காணிக்கூறுகளின் உரித்து என்பவற்றை சபைக்கு கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | வாகனங்களினதும் ஆதனங்களினதும் சட்ட ரீதியான உரித்தை சபையின் பெயரில் கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். |

### 3.3.3 விளைவற்ற / குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) 2017 பின்னர் உள்ளூராட்சி நிறுவனங்களை கட்டியெழுப்பும் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் ரூபா 9,254,688 தொகை மற்றும் 8,056,903 தொகை செலவிடப்பட்டு 2017 திசெம்பர் 26 ஆம் திகதி வேலை பூர்த்தி செய்யப்படும் அடிப்படையில் பொது பூங்காவில் 08 கடைகளை உடைய கட்டிடம் மற்றும் வழிப்பதனாக்கி செய்யப்பட்ட 04 அறைகளை உடைய கட்டிடம் 2018 ஆம் ஆண்டில் வாடகைக்கு வழங்கப்பட்டு வருமானம் உழைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | வாடகைக்கு வழங்கி வருமானத்தை உழைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | கருத்து தெரிவிக்கப்படவில்லை. |
| (ஆ) 2017 இல் பிரதேச சபையை வழுப்படுத்தும் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் ரூபா 6,049,901 செலவில் 2017 திசெம்பர் 25 ஆம் திகதி வேலை பூர்த்தி செய்யப்படும் | வாடகைக்கு வழங்கி வருமானத்தை உழைப்பதற்கு நடவடிக்கை எடுக்கபபட | கருத்து தெரிவிக்கப்படவில்லை. |

| | | | |
|---|---|---|---|
| | அடிப்படையில் பலநோக்கு கட்டிடம் வாடகைக்கு வழங்கப்பட்டு வருமானத்தை உழைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | வேண்டும். | |
| (இ) | சபைக்கு சொந்தமான மோட்டார் கிரேடர் 19 மணித்தியாலமும் பெகோ லோடர் 158 மணித்தியாலமும் 2018 ஆம் ஆண்டில் பயன்படுத்தப்பட்டிருந்ததுடன் அதன் மூலம் போதியளவான வருமானத்தை உழைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை | வாடகைக்கு வழங்கி வருமானத்தை உழைப்பதற்கு நடவடிக்கை எடுக்கபபட வேண்டும். | கருத்து தெரிவிக்கப்படவில்லை. |

**3.4.4 வாகனப் பயன்பாடு**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபைக்கு சொந்தமான 11 வாகனங்களுக்காக 2018 ஆம் ஆண்டில் வருமான அனுமதிப் பத்திரத்தை பெற்றுக் கொள்வதற்கும் காப்புறுதியைச் செய்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | வருமான அனுமதிப் பத்திரத்தை பெற்றுக் கொள்வதற்கும் காப்புறுதி செய்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | கருத்து தெரிவிக்கப்படவில்லை. |

**3.5.1 பெறுகைத் திட்டம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2006 மார்ச் 24 ஆம் திகதிய தேசிய பாதீட்டு சுற்றறிக்கை இலக்கம் 128 இன் பிரகாரம் பிரதேச சபையினால் 2018 ஆம் ஆண்டிற்காக வருடாந்த பெறுகைத் திட்டமொன்று தயாரிக்கப்படவில்லை. | ஒவ்வொரு வருடங்களுக்காகவும் பெறுகைத்திட்டம் தயாரிக்கப்பட வேண்டும். | கருத்து தெரிவிக்கப்படவில் லை. |